**கவனிக்க.-** 2010.07.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1666 - 2010 අගෝස්තු මස 06 වැනි සිකුරාදා - 2010.08.06
1666 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1260 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1260 | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டம்

அதிகாரங்கள் உரிமையாக்கும் கட்டளை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர்விளைவுகள்) சட்டத்தின் பிரகாரம் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கத்தின் 2(2) ஆம் உபபிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் (பிரகாரம் தென் மாகாண சபையின் கடற்றொழில், கலாச்சார, உணவு வழங்கலும் விநியோகித்தலும் வர்த்தகமும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெனகம விதானகே ரோஹன பிரிய உபுல் ஆகிய நான் தென் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உதவி அளிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழுள்ளதும் அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் கீழுள்ளதுமான குறிப்பிட்டுள்ள அட்டவணையில் III ஆவது நிரலிலுள்ள சகல அதிகாரங்களையும் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இத்தால் அளிக்கின்றேன்.*

தெனகம விதாரனகே ரோஹனபிரிய,
கடற்றொழில், கலாச்சார, உணவு விநியோகித்தலும்
வர்த்தகமும், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,
தென்மாகாணம்.

காலி,
2010, யுன் 15.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|
| 1. ரஸிகா உபேந்திரி இத்தமல்கொட திஸாநாயக | 2010.02.01 | கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் இல. 3, 5, 6, 7, 8, 9, 33, 39, 42, 43, 44, (44(6) நீங்கி) 45, 46, 48, 49, 50, 52, 53, 54, 58, (58(2) அ உம் 58(5) உம் நீங்கி) 59,68 மற்றும் 72 ஆம் பிரிவின் கீழ் பதிவாளருக்குரிய சகல அதிகாரங்களும் வீதிகளின் கீழுள்ள அதிகாரங்கள் 4, 11, 15, 16(11), 18, 19, 20, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49(49xii) நீங்கி) 51, 52, 53 ஆம் பிரிவுடைய சட்டத்தின் கீழ் பதிவாளருக்குரிய சகல அதிகாரங்களும் |

8-129

# பதவிகள் - வெற்றிடம்

### சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சிறுவர் இல்லங்களின் இல்லத் தலைவி (தரம் III) பதவிகளுக்கான விண்ணப்பப்பத்திரம்

சப்பிரகமுவ மாகாண மாகாண சபையில் குருவிற்றையில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் மற்றும் இரத்தினபுரித் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள சிறுவர் நலன்புரி மத்திய நிலையம் ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுள்ள சப்பிரகமுவ மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை நான்கு ஆகும்.

(1) குருவிற்ற அரசு பொறுப்பேற்கும் சிறுவர் இல்லத்திற்கான வெற்றிடங்கள் 02 ஆகும்.

(2) இரத்தினபுரித் தேவாலேகாவ சிறுவர் நலன்புரி நிலையத்திற்கான வெற்றிடங்கள் 02 ஆகும்.

3. **விண்ணப்பிப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்:**

(அ) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நன்னடத்தையும் ஒழுக்க நலமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

(ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்பு அண்மித்த ஆறு வருட காலத்தினுள் குறைந்தது தொடர்ந்து மூன்று வருட காலங்கள் சப்பிரகமுவ மாகாண சபை நிருவாகப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராய் இருத்தல்.

**4. கல்வி மற்றும் தொழிற்றகமைகள்:**

(அ) 01. உள்ளக விண்ணப்பதாரிகள் :-

01. (1) கீழ் உள்ள 'அ' மற்றும் 'ஆ' பகுதிகளில் குறிப்பிடப் படும் தகைமைகளை நிறைவு செய்திருத்தல்:-

(அ) இல்லத் தலைவி, சமையற்காரி, துணிகமுவுபவர் (பெண்) ஆகிய பதவிகள் ஒன்றிலோ, சிலவற் றிலோ மூன்று வருட அல்லது 1095 நாட்கள் திருப்தியான சேவைக்காலத்தை, நிறைவு செய்து தற்போது அவ்வகையான பதவியில் நிரந்தர, தற்காலிக, சமயாசமய, பதிற்கடமை, ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் ஊழியராயிருத்தல்.

(ஆ) சேவைக்காலத்தினுள் சிறு எச்சரிக்கை தவிர்ந்த சேவையிலிருந்து விலக்கப்படுதல், சேவையிலி ருந்து விலகுதல் ஆகியவற்றிற்கு உட்படாத பகுதி 'அ' வில் குறிப்பிடப்பட்ட திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

01. (2) க. பொ. த. (சா. த.) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் சிங்களம், தமிழ், மொழியுடன் கணிதம் உட்பட 03 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி அடைந்திருத்தலோடு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

02. வெளிவாரி விண்ணப்பதாரிகள்:

(1) க. பொ. த. (சா.த.) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் சிங்களம், தமிழ் மொழியுடன் கணிதம் உட்பட 03 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி அடைந்திருத்தலோடு க. பொ. த. (உ.த.) பரீட்சையில் 03 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

(2) நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லத்தில் அல்லது இல்லங்களில் 05 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

அல்லது

சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் உளவியல் போன்ற பாடங்களுக்கான மேலதிக பாடநெறிகளைப் பின்பற்றியிருத்தல் விசேட தகைமையாகும்.

(3) சப்பிரகமுவ மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் இருக்கும் பெற்றோரை இழந்த (அனாதை) கைவிடப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குக் குறைந்தது 10 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்.

05. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 13,120 - 10 × 145 - 11 × 170 - 10 × 240 - 10 × 320 - ரூபா 22,040 ஆகும். (அரச சுற்று நிரூப இலக்கம் 06/2006 (iv) M.N 1 - 2006 A இன் படி ஆகும்.)

06. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறையும் அதற்குரிய தகவல்களும்:**

(i) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி A4 (செ. மீ. 21 × 29) அளவுடைய தாளில் இருபக்கங்களையும் பாவித்துத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் இங்கு கீழ் 6(ஏ) இல் குறிப்பிடப்பட்டபடி தன்னுடைய கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 11 வரையும் மீதிப் பகுதி விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிப் பகுதி இரண்டாம் பக்கத்திலும் வருமாறு விண்ணப்பப்பத்திரத்தை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2010.09.15 ஆந் திகதி ஆகும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்ப வேண்டிய முகவரி ''செயலாளர்'', மாகாண அரச சேவை ஆணைக்குழு, சப்பிரகமுவ மாகாண சபைக் கட்டடத் தொகுதி, புதிய நகரம், இரத்தினபுரி ஆகும். விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டியதோடு அவை வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இல்லத் தலைவி பதவி தரம் III'' என்று குறப்பிடப்படவும் வேண்டும். அரச/மாகாண அரச சேவையில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் விண்ணப்பதாரி யானால் அவருடைய விண்ணப்பப்படிவம் அவர் சேவைபுரியும் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அப்படி தங்கள் திணைக்களத் தலைவர் ஊடாகச் சமர்ப்பிக் கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திரத்துடன் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் உரிய இடத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

(ii) சகல விண்ணப்பதாரிகளும் இதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் செலுத்தல் வேண்டும். செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 300. பரீட்சைக் கட்டணம் சப்பிரகமுவ மாகாண சபையிலுள்ள ஏதாவது ஒரு அமைச்சின் அலுவலகத்தில், திணைக்களத்தில் (உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த) அல்லது சப்பிரகமுவ மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்தி அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் சப்பிரகமுவ மாகாண சபை வருமானத் தலைப்பு இலக்கம் 2003.09.01 இற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் செலுத்தப்பட வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சை நடாத்தப்படும் மொழி மூலம்.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பபத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

(iv) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல்.- விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அவற்றில் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஏழு தினங்களுக்கு முன் பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் கீழ்க்குறிப் பிடப்பட்ட விபரங்களுடன் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுச் செயலாளருடன் தொடர்புகொள்ள வேண்டும்:-

பரீட்சையின் பெயர் :-
விண்ணப்பதாரியின் பெயர் :-
பதிவு செய்த அஞ்சல் அலுவலகமும் மற்றும் பதிவு இலக்கமும் திகதியும் :-

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விண்ணப்பப்படிவங்களும் உரிய முறைப்படி சப்பிரகமுவ மாகாண வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப் படும் விதத்தில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாமலோ அல்லது அப்படிச் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டை இணைத்தனுப்பாத விண்ணப்பப்படிவங்களும் உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதற்கு முன்பு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் தங்களால் பூரணப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் திருப்திப்பட்டுக் கொள்ளவேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளித்தல் தகைமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களின் தொகைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் தீர்மானிக்கப்படும்.

(v) *விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-*

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, முப்படைகளில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகள் அல்லது வருடமொன்றிற்கு ரூபா 2,30,700 இற்குக் குறையாத வருடாந்த ஒன்று திரட்டிய சம்பளம் பெறும் அரச மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**7. தெரிவு செய்யும் முறை.**- விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுவதன் மூலம் நிலவும் வெற்றிட எண்ணிக்கை இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களின் சனத்தொக வீதங்களுக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன்படி உள்வாரி விண்ணப்பதாரிகளில் அறுபது வீதமும் (60%) மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளில் நாற்பது வீதமும் (40%) ஆக பதவி வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படும். (உள்ளக விண்ணப்பதாரிகளில் அறுபது வீதமானவர்கள் (60%) இல்லாதவிடத்து அவ் வெற்றிட எண்ணிக்கை வெளிவாரி விண்ணப்பதாரிகளினாலும் வெளிவாரி விண்ணப்பதாரிகளில் நாற்பது வீதமானவர்கள் (40%) இல்லாதவிடத்து அவ்வெற்றிட எண்ணிக்கை உள்ளக விண்ணப்பதாரிகளினாலும் வெற்றிடங்கள் நிரப்பப்படும். அதன்படி ஒரு மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களில் பரீட்சையில் உயர் புள்ளியைப் பெற்று அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளவர்களின் திறமையடிப்படையில் அம்மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நியமிக்கப்படுவர். அப்படி தெரிவு செய்யப்படத் தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையின் இரு வினாத்தாள்களிலும் ஒவ்வொன்றிலும் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சையில் சமனான புள்ளிகளைப் பெற்றுள்ள போது வரையறை செய்யப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கைகளுக்கேற்ப

தெரிவு செய்வதில் சிக்கல்கள் தோன்றுமிடத்து அதுபற்றி இறுதித் தீர்மானம் சப்பிரகமுவ மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு வினால் எடுக்கப்படும். இவ்விண்ணப்பங்கள் கோருவதனால் வெற்றிடங்கள் முழுவதையுமோ அல்லது சிலவற்றையோ நிரப்பாது இருப்பது பற்றி இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும்.

*8.* **எழுத்துப் பரீட்சை.**- எழுத்துப் பரீட்சை சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நடாத்தப்படுவதோடு கீழ்க்குறிப்பிடப்படும் வகையில் இரு வினாத்தாள்களைக் கொண்டதாகவும் இருக்கும்:-

I. நுண்ணறிவுப் பரீட்சை வினாத்தாள்
(பரீட்சார்த்தியினுடைய மொழி சார்ந்த மற்றும் எண் சார்ந்த ஆற்றல்களையும் பரீட்சித்தல்)
(காலம் ஒரு மணித்தியாலம்) 100 புள்ளிகள்

II. பொது அறிவு வினாத்தாள்
(சுகாதாரமும் போசணையும், குழந்தை அபிவிருத்தி குழந்தை வளர்ப்பு ஆகியன பற்றிய அறிவை மதிப்பிடல்)
(காலம் ஒரு மணித்தியாலம்) 100 புள்ளிகள்

(சித்தி பெறும் புள்ளிகள் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் நூற்றூக்கு நாற்பதாகும் (40%).

பரீட்சை நடாத்தப்படும் போது பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கிடைத்துள்ள பரீட்சை அனுமதி அட்டை மற்றும் விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேசிய அடையாள அட்டையையோ, அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டையோ பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதே போல் பரீட்சை நடைபெறும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் மற்றும் நியமங்கள் நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் பின்பற்ற வேண்டும்.

*9. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.*- இப்பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதிய உரித்துடைய, நியமனம் பெறுநர் விதவை கள்/தபுதாரர், அனாதைகள், ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். நியமனம் மூன்று வருட நன்னடத்தை காலத்தைக் கொண்டதுடன் அவர்கள் தாபனக் கோவை நிதிப் பிரமாணங்கள் திணைக்களச் சட்ட திட்டங்கள் ஒழுங்கு விதிகளையும் காலத்திற்குக் காலம் அரசு மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றி னால் முன் வைக்கப்படும் சட்ட திட்டங்கள் கட்டளைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

*10. வேறு காரணங்கள்.*- பரீட்சை நடாத்திய பின் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக அழைக்கப்படும் போது விண்ணப்பப்படி வத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்களின் உண்மைத் தன்மையை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களையும், விசேடமாகத் தாம் விண்ணப்பித்துள்ள மாவட்டம், நிரந்தர வதிவிடம் ஆகியவற்றை உறுதிப் படுத்துவதற்கோ விதிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் பொய்யான தகவல் கொடுத்திருத்தல் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்வதற்குக் காரணமாவதோடு நியமனம் வழங்கப்பட்ட பின்பு பொய்யான அல்லது தவறான தகவல்கள் வழங்கப்பட்ட விண்ணப்ப தாரியாக காணப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாக வேண்டிவரும். இவ்வறிவித்தலில் உள்ள ஒழுங்கு முறைகளுக்கு (சட்ட திட்டங்களுக்கு) உட்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அதுபற்றி இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும்.

சுனேத்திரா குணவர்த்தன,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சப்பிரகமுவ மாகாணம்.

மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்,
"சப்பிரகமுவ மாகாணக் கட்டடத் தொகுதி",
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2010, ஆடி 21.

விண்ணப்பப்படிவம்

**சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு**

*சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சிறுவர் இல்லங்களில்*
*III ஆம் தர இல்லத் தலைவி பதவி*

சுட்டிலக்கம் [ ]
அலுவலக பாவனைக்கு மட்டும்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-
   (I) ஆங்கிலத்தில் :-----.
   (II) சிங்களத்தில்/தமிழில் :-----.

2. முழுப் பெயர் :-
   (I) ஆங்கிலத்தில் :-----.
   (II) சிங்களத்தில்/தமிழில் :-----.

3. பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:-
   (I) ஆங்கிலத்தில் :-----.
   (II) சிங்களத்தில்/தமிழில் :-----.

4. நிரந்தர வதிவிடத் தகைமை பெற்றுள்ள மாவட்டம்: [ ]

5. பால் : (பெண் F/ஆண் M) [ ]

6. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) [ ]

7. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாவட்டம் :- (இரத்தினபுரி/கேகாலை) [ ]

8. பிறந்த திகதி :-
   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

   2010.09.15 ஆந் திகதியன்று வயது:-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

9. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

10. தொலைபேசி இலக்கம் :-----.

11. கல்வித் தகைமை:-
   I. விண்ணப்பம் கோருவது விண்ணப்பம் கோரும் அறிவுறுத்தலின் 04 (அ) 01 இன் படி உள்வாரி விண்ணப்பதாரியாயின்:-

      (அ) தற்போது வகிக்கும் பதவி :-----.
      (ஆ) அப்பதவிக்கு நியமிக்கப் பெற்ற திகதி :-----.
      (இ) தற்போது சேவை புரியும் நிலையத்தின் அலுவலக முக வரி :-----.
      (ஈ) 2010.09.15 ஆந் தினத்தன்று அச்சேவையில் சேவைக் காலம் :-----.
      (உ) அச்சேவை நிரந்தரம்/ தற்காலிகம்/ சமயாசமயம்/ ......................... ஒப்பந்த அடிப்படையில் என்பதுபற்றிக் குறிப்பிடவும்.

   II. க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) பரீட்சை சான்றிதழ்களுக்கு உரிய பரீட்சையாயின் வருடம் சுட்டெண் பெற்றுள்ள சித்திகள் பற்றிய விபரங்கள் காட்டப்பட வேண்டியதோடு உரிய பரீட்சைகள் மற்றும் வகிக்கும் பதவிகளுக்குப் பொருத்தமான சான்றிதல்களின் பிரதிகள் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

   III. விண்ணப்பம் கோருவது விண்ணப்பம் கோரும் அறிவுறுத்தலின் 04 (அ) 02 இன் படி வெளிவாரி விண்ணப்பதாரியாயின்.-

      க. பொ. த. . (சா. த.), க. பொ. த. (உ. த.) பரீட்சைச் சான்றிதழ் களுக்கு உரிய பரீட்சையாயின் வருடம் சுட்டெண் பெற்றுள்ள சித்திகள் பெற்றுள்ள அனுபவங்கள் பாடநெறிகள் பற்றிய விபரங்கள் காட்டப்பட வேண்டியதோடு உரிய பரீட்சைகளின், அனுபவங்களின் பாடநெறிகளின் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

12. தம் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மாவட்டத்திற்குரிய கீழ்க் காணப்படும் விபரங்களைத் தருக.

   I. பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :-----.
   II. 2010.09.15 ஆந் தினத்தன்று சப்பிரகமுவ மாகாண நிருவாகப் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வசித்த காலம்

13. அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலிருந்து ஏதாவது காரணத்தினால் விலகியோ, விலக்கப்பட்டோ இருப்பின் வகித்த பதவி, சேவை புரிந்த திணைக்களம், மற்றும் விலக்கப்பட்டதற்கான காரணம் என்பவற்றைக் குறிப்பிடவும்.

14. ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? அப்படியாயின் விபரத்தைக் குறிப்பிடவும்.

15. பரீட்சைக் கட்டணம் ரூபா 300 சப்பிரகமுவ மாகாண மாகாண சபை வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கும் விதத்தில் செலுத்திய விபரம்:-

   அக்கட்டணம் செலுத்திய திகதி :-----.
   செலுத்திய அலுவலகம் :-----.
   அதற்காகக் கிடைத்த பற்றுச் சீட்டு இலக்கம் :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை இவ்விடத்தில் ஒட்டுதல் வேண்டும். |

இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையும் சரியானவையும் என வெளிப்படுத்துகின்றேன். ஆட்சேர்ப்புப் பரீட்சை பற்றிய நிபந்தனைகளின் படி என்னால் தவறான தகவல்கள் தரப்பட்டிருப்பின் பரீட்சைக்கு முன்போ பின்போ எனது பரீட்சார்த்தி தன்மை நிராகரிக்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்பு வெளிப்படுமாயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.............
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............... யை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும் அவர்

................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதி கூறுகின்றேன்.

..................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவியும் இலச்சினையும் :-----.
திகதி :-----.

*(அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரியாயின் கீழ்க்குறிப்பிடப்படும் உறுதியுரை திணைக்களத் தலைவரினாலோ அல்லது அவரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினாலோ செய்யப்பட வேண்டும்)-*

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(I) இத்திணைக்களத்தில் .......... ஆந் திகதியிலிருந்து .................. பதவியில் சேவை புரியும் திரு./திருமதி/செல்வி ............. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை பெற வேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த சேவையில் இருந்து விலகுதல், சேவையில் இருந்து நிறுத்தப்படல் ஆகியன நடைபெறவில்லை என்றும் வேறு எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உட்படாத திருப்தியான சேவைக் காலத்தைக் கொண்டவர் என்றும் விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும் உண்மையானவையும் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

(II) மேற்குறிப்பிட்ட பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

..................................
திணைக்கள/நிறுவனத் தலைவர்,
அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தர்,
கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திகதி :-----.
(தயவு செய்து திணைக்கள/நிறுவன இலச்சினையை இடவும்).

*8-64*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2010**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | .. | வெள்ளி | 06.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.07.2010 |
| | | வெள்ளி | 13.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.07.2010 |
| | | வெள்ளி | 20.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.08.2010 |
| | | வெள்ளி | 27.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.08.2010 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2010 |
| | | வியாழன் | 09.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2010 |
| | | வெள்ளி | 17.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2010 |
| | | வெள்ளி | 24.09.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.09.2010 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2010 |
| | | வெள்ளி | 08.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2010 |
| | | வெள்ளி | 15.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2010 |
| | | வியாழன் | 21.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2010 |
| | | வெள்ளி | 29.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*